# வாழ்த்து பேனரை தடை செய்ய உழவர்கரை நகராட்சி புது 'டெக்னிக்'

**புதுச்சேரி, பிப். 4–**

திருமண வீடுகளுக்கு, வாழ்த்து மடலுடன், டிஜிட்டல் பேனர் வைக்கக் கூடாது என, உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் கடிதம் அனுப்புகின்றனர்.

புதுச்சேரி மாநிலத்தில், புதுச்சேரி திறந்தவெளி (அழகு சீர்கேடு தடுப்பு) சட்டப்படி, பொது இடங்கள் மற்றும் சாலைகளில் டிஜிட்டல் பேனர் வைக்க தடை செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளிலும், டிஜிட்டல் பேனர்கள் வைப்பதை தடுக்கவும், மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனாலும், புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் பிறந்த நாள், திருமண விழா, காதணி விழா ஆகியவற்றிற்கு வாழ்த்துக்கள் தெரிவித்து டிஜிட்டல் பேனர்கள் வைக்கும் கலாசாரம் முடிவுக்கு வராமல் உள்ளது.

இந்நிலையில், உழவர்கரை நகராட்சி நிர்வாகம், டிஜிட்டல் பேனர் வைப்பதை தடுப்பதற்கு புது முயற்சியில் இறங்கியுள்ளது. உழவர்கரை நகராட்சி பகுதியில் உள்ள திருமண மண்டபங்களில், பதிவு செய்துள்ள திருமண விழா நடத்துபவர்களின் முகவரியை, நகராட்சி அலுவலர்கள் பெற்றுள்ளனர்.

இதன் மூலம், திருமண விழா நடத்தும் நபர்களின் வீடுகளுக்கு, நகராட்சி சார்பில் கடிதம் அனுப்புகின்றனர்.

அதில், 'உங்கள் வீட்டு சுப நிகழ்ச்சியானது இந்த தேதியில் நடப்பதாக அறியப்படுகிறது. அதற்கு, உழவர்கரை நகராட்சி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். புதுச்சேரியில் டிஜிட்டல் பேனர் வைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிக்காக பேனர்கள் வைக்கக்கூடாது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உழவர்கரை நகராட்சியின் இந்த புதிய முயற்சி, பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த முறையை மற்ற நகராட்சிகளும் பின்பற்றினால், புதுச்சேரியில் டிஜிட்டல் பேனர் கலாசாரம் வெகுவாக குறையும்.

---

உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

அறிவிப்பு

தங்களுடைய வீட்டு சுபநிகழ்ச்சியானது மண்டபத்தில் வரும் 04-02-2018 அன்று நடக்கவுள்ளது என்று அறியப்படுகிறது. அதற்கு உழவர்கரை நகராட்சி சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

புதுச்சேரி மாநிலத்தில், புதுச்சேரி திறந்தவெளி (அழகு சீர்கேடு தடுப்பு) சட்டம், 2000 (The Pondicherry Open Places (Prevention of Disfigurement) Act, 2000)-ன்படி பொது இடங்கள் மற்றும் சாலைகளில் பேனர்கள் வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தி புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனைத்து நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின்படி பேனர்கள் வைக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். தவறுவோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். எனவே தங்கள் வீட்டு சுபநிகழ்ச்சிக்காக எந்தவொரு பேனர்களும் வைக்கக்கூடாது என்று பணிவுடன் இதன்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் தங்களுடைய இல்ல சுபநிகழ்ச்சி இனிதே நடைபெற மீண்டும் உழவர்கரை நகராட்சி சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

2/2/18

இ/ஒப்பம்,
(M.S. ரமேஷ்)
ஆணையர்

பெறுநர்:

■ உழவர்கரை நகராட்சி சார்பில் திருமண வீடுகளுக்கு வாழ்த்துடன், பேனர் வைக்க தடை என குறிப்பிட்டு அனுப்பியுள்ள கடிதம்

Scanned by CamScanner

# கனகன் ஏரி படகு குழாமை கிரண்பேடி திறந்து வைத்தார்





புதுவை கனகன் ஏரியில் படகு சவாரியை கவர்னர் கிரண்பேடி நேற்று தொடங்கி வைத்தார். அருகில் எதிர்கட்சி தலைவர் ரங்கசாமி, அமைச்சர் நமச்சிவாயம். அடுத்தபடம்: சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக படகில் சவாரி செய்கின்றனர்.

## பொதுமக்கள், மாணவர்கள் பாராட்டு

புதுச்சேரி, பிப். 4: புதுவை இந்திரா நகர் தொகுதியில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு கனகன் ஏரியை சீரமைத்ததோடு, அங்கு படகு குழாமை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கவர்னர் கிரண்பேடி நேற்று திறந்து வைத்தார். இதையடுத்து அவருக்கு பொதுமக்கள், மாணவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

புதுவை கனகன் ஏரியில் ஆகாய தாமரை படர்ந்திருந்த நிலையில் அதை சில மாதங்களுக்கு முன்பு பார்வையிட்ட கவர்னர் கிரண்பேடி, அவற்றை சீரமைக்க நடவடிக்கை மேற்கொண்டார். இதற்காக பொதுப்பணி, வனத்துறை, காவல் துறை, சுற்றுலாத்துறை மற்றும் உள்ளாட்சித் துறை அதிகாரிகளை ஒவ்வொரு வார சனிக்கிழமை ஆய்வுப் பணி பெயரில் வரழைத்து அறிவுரைகள் வழங்கினார்.

அதன்படி அங்கு ஆகாய தாமரைகள் எந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டதோடு, வாக்கிங் செல்வதற்காக ஏரிக்கரை சமன்படுத்தப்பட்டு, பொதுமக்கள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டது. மேலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு சமூக குற்றங்கள் முற்றிலுமாக தடுக்கப்பட்ட நிலையில் தற்போது கனகன் ஏரியை சுற்றுலாதலமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. இதற்காக அங்குள்ள கருமாதி கொட்டகை சீரமைக்கப்பட்டு பொதுமக்கள் வசதிக்காக 2 கழிப்பறைகள் கட்டப்பட்டன. மேலும் சுற்றுலாத்துறை சார்பில் படகு சவாரியும் அமைக்கப்பட்டன.

இதனிடையே சீரமைக்கப்பட்ட கனகன் ஏரி படகு குழாமை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் விழா நேற்று (3ம்தேதி) நடைபெற்றது. கவர்னர் கிரண்பேடி, எதிர்க்கட்சி தலைவர் ரங்கசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் கூட்டாக ரிப்பனை வெட்டி படகு சவாரியை தொடங்கி வைத்தனர். முன்னதாக 3 பேரும் அங்குள்ள அம்மன் கோயிலில் சாமிதரிசனம் செய்தனர். அப்போது அவர்களுக்கு கோயில் நிர்வாகம் தரப்பில் பூரண கும்பம் ரியாதை வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் கனகன் ஏரியை முழுவதுமாக 3 பேரும் நடைபயிற்சி செய்து பார்வையிட்டனர். அவர்களுடன் அதிகாரிகள், காவல்துறையினர், பொதுமக்களும் உடன் சென்றனர். அப்போது இந்த ஏரியில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் அவற்றை முறையாக பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கவர்னர் கிரண்பேடி எடுத்துரைத்தார்.

இந்த விழாவில் ஜெயபால் எம்எல்ஏ, நியமன எம்எல்ஏ செல்வகணபதி மற்றும் அரசு செயலர்கள் கந்தவேலு, அன்பரசு, மற்றும் அதிகாரிகள், நலச்சங்க நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ- மாணவிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் கவர்னர் கிரண்பேடி கூறுகையில், கனகன் ஏரியை இங்குள்ள அனைவரின் முயற்சியால் சீரமைக்கப்பட்டு தற்போது மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதற்காக அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து துறைகளும் இதை தொடர்ந்து மேம்படுத்தி பராமரிப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

புதுவைக்கு வருகிற 28ம்தேதி பிரதமரின் வருகையையொட்டி கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், மாநில வளர்ச்சி, சட்டம்- ஒழுங்கு பற்றியும் முதல்வர் நாராயணசாமியுடன் ஆலோசனை நடத்தி உள்ளேன். ஆரோவில் பொன்விழாவில் அவர் பங்கேற்கிறார். அவரது நிகழ்ச்சிகள் குறித்து இறுதி செய்ய தலைமை செயலர் டெல்லி சென்றுள்ளார்.

ஆகாய தாமரை படர்ந்து, சமூக குற்றங்கள் அரங்கேறி, துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் இருந்த கனகன் ஏரியை கடந்த ஓராண்டாக ஆய்வு செய்து பணிகளை கடந்த 3 மாதமாக தொடர்ந்து கண்காணித்து முடுக்கி விட்டு அதை சுற்றுலாத்தலமாக்கி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த கவர்னர் கிரண்பேடிக்கு அப்பகுதி மக்கள் மட்டுமின்றி மாணவர்களும், அரசியல் கட்சி நிர்வாகிகளும் பாராட்டு தெரிவித்தனர்.

> பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், மாநில வளர்ச்சி, சட்டம்- ஒழுங்கு பற்றியும் முதல்வர் நாராயணசாமியுடன் ஆலோசனை நடத்தி உள்ளேன்

### ரூ.5 கட்டணத்தில் மிதி படகு சவாரி

புதுவை கனகன் ஏரி படகு குழாம் நேற்று திறக்கப்பட்டது. இங்குள்ள நீர்நிலைக்கு ஏற்ப தற்போது முதல்கட்டமாக மிதி படகு சவாரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தினமும் காலை 9 முதல் மாலை 6 மணி வரை செயல்படும். தலா 2 பேர், 4 பேர் செல்லும் வகையில் தனித்தனியாக மொத்தம் 5 மிதி படகுகள் சவாரிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதற்கு கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ.5 வசூலிக்கப்படுகிறது. அரைமணி நேரம் கனகன் ஏரியில் அவர்கள் மதி படகு சவாரி செய்து மகிழலாம். படகு சவாரி செல்பவர்களின் பாதுகாப்பு கருதி அவர்களுக்கு பாதுகாப்பு சாதனம் (மிதவை ஜாக்கெட்) வழங்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

# பேனர் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வழிகாட்டுகிறது உழவர்கரை நகராட்சி

**புதுச்சேரி, பிப். 11–**

உழவர்கரை நகராட்சியில் வாழ்த்து கடிதத்துடன், டிஜிட்டல் பேனர் தடை பிரசாரம் பொதுமக்களிடையே வரவேற்பு பெற்றுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தில், பொது இடங்கள் மற்றும் சாலைகளில் டிஜிட்டல் பேனர் வைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், புதுச்சேரியில் பல இடங்களில் டிஜிட்டல் பேனர் கலாசாரம் முடிவுக்கு வராமல் உள்ளது.

இதை தடுக்கும் வகையில், உழவர்கரை நகராட்சி நிர்வாகம், தங்கள் பகுதி திருமண மண்டபங்களில், சுப நிகழ்ச்சி நடத்துபவர்களின் முகவரிகளுக்கு வாழ்த்து கடிதம் அனுப்பியது.

அதில் வாழ்த்துடன், டிஜிட்டல் பேனர் வைக்க தடை மற்றும் அதற்கான சட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, கடந்த 4 மற்றும் 5ம் தேதி முகூர்த்த நாட்களில், உழவர்கரை நகராட்சியில் 23 சுப நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கு இந்த கடிதம் அனுப்பப்பட்டது.

இதில், 21 நபர்கள் சுப நிகழ்ச்சியில், டிஜிட்டல் பேனர் வைக்கவில்லை. மீதமுள்ள, 2 நபர்கள் வைத்திருந்த டிஜிட்டல் பேனரும் நகராட்சி அதிகாரிகள் அறிவுறுத்தலால் உடனடியாக அகற்றப்பட்டன.

இதை தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக நேற்று 10 மற்றும் இன்று 11ம் தேதி முகூர்த்த நாட்களில், சுப நிகழ்ச்சிகள் நடத்தும் வீடுகளுக்கும் உழவர்கரை நகராட்சி, கடிதம் அனுப்பி உள்ளது.

உழவர்கரை நகராட்சியின், இந்த முயற்சிக்கு தற்போது, கை மேல் பலன் கிடைத்து வருகிறது.

உழவர்கரை நகராட்சியை போன்று, புதுச்சேரி மற்றும் காரைக்கால் நகராட்சி அதிகாரிகள் செயல்பட்டால், புதுச்சேரி மாநிலத்தில் டிஜிட்டல் பேனர் கலாசாரத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

Scanned by CamScanner

## தூய்மை இந்தியா போட்டி

# கதிர்காமம் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளிக்கு விருது



▶ தூய்மை இந்தியா போட்டியில் வெற்றி பெற்ற கதிர்காமம் அரசு பெண்கள் மேனிலைப் பள்ளிக்கு உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் விருது வழங்கினார்.

**புதுச்சேரி, பிப் 15:** தூய்மை இந்தியா போட்டியில் சிறந்த பள்ளியாக கதிர்காமம் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் ஸ்வச சர்வேக்ஷன் 2018 என்ற தலைப்பில் மத்திய அரசு 4041 நகராட்சிகளுக்கிடையே சுத்தத்தை மையமாக வைத்து போட்டி நடத்துகிறது. இப்போட்டியின் அங்கமாக பள்ளிகள், மருத்துவமனைகள், அங்காடிகள், உணவகங்கள் இடையே சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மையமாக வைத்து போட்டிகள் நடத்தி கவுரவிக்க வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும்.

அதன்படி உழவர்கரை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அதிகமான மாணவ, மாணவிகளை கொண்ட முதல் 5 அரசு மற்றும் தனியார் பள்ளிகள், அதிக படுக்கை வசதிகள் கொண்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மக்கள் அதிகமாக கூடும் அங்காடிகள் உணவகங்களுக்கிடையேயான போட்டியை உழவர்கரை நகராட்சி ஜனவரி மாதம் நடத்தியது.

இதில் கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி சிறந்த அரசு மேனிலைப்பள்ளியாகவும், இந்திராகாந்தி அரசு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சிறந்த அரசு மருத்துவமனையாகவும், லாஸ்பேட்டை உழவர் சந்தை சிறந்த அங்காடியாகவும் தேர்வு செய்யப்பட்டது. அதன்படி வெற்றிப்பெற்றவர்களுக்கான விருதை உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் வழங்கினார்.

Scanned by CamScanner

# நவீன சுகாதார மீன் அங்காடி 19ம் தேதி முதல் இயங்கும்

## உழவர்கரை நகராட்சி ஆணையர் தகவல்

**புதுச்சேரி, பிப். 15:** புதுச்சேரி லாஸ்பேட்டை கிழக்கு கடற்கரை சாலையில் அமைக்கப்பட்டுள்ள நவீன சுகாதார மீன் அங்காடி வரும் 19ம் தேதி முதல் செயல்பட துவங்குகிறது.

இது குறித்து உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

புதுச்சேரி லாஸ்பேட்டை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள நவீன சுகாதார மீன் அங்காடி வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் புதுச்சேரி அரசால் ரூ.13.42 கோடி செலவில் குளிர்சாதன வசதியுடன் இந்த மீன் அங்காடி கட்டப்பட்டது. 37,886 சதுரஅடியில் உலக தரத்தில் அமைக்கப்பட்ட இந்த அங்காடியில் மீன்கள் விற்க 110 குளிரூட்டப்பட்ட கடைகள், மீன் பதப்படுத்தும் அறை, ஐஸ் பிளான்ட், ஜெனரேட்டர், உணவகம், முற்றிலும் குளிரூட்டப்பட்ட காய், கனி விற்பனையகம், பொதுக்கழிவறை மற்றும் விசாலமான வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகள் உள்ளது.

முதற்கட்டமாக, புதுச்சேரி மீன் வளத்துறையால் தேர்ந்து எடுக்கப்பட்ட 43 பயனாளிகளை கொண்டு மீன் விற்பனை ஆரம்பிக்கப்பட உள்ளது. மேலும் ஏற்கனவே மீன் பதப்படுத்தும் அறை, உணவகம் மற்றும் காய், கனி விற்பனையகம் ஆகியவற்றை ஏலம் எடுத்தவர்கள் விரைவில் தொடங்க உள்ளனர்.

இந்த அங்காடியில் கடலில் இருந்து கொண்டு வரும் மீன்களை வியாபாரிகள் சுத்தம் செய்த பின்னரே 3 டிகிரி செல்சியஸ் அளவில் இயங்கும் குளிரூட்டப்பட்ட பெட்டியில் முற்றிலும் சுகாதாரமான முறையில் விற்பனை செய்யப்படும். மேலும் அங்கேயே மீனை வெட்டி சுத்தம் செய்வதற்கான வசதிகளும் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Scanned by CamScanner

புதிய வரி நிர்ணயம் செய்ய

# வீடுகளை படம்பிடித்து விவரங்களை சேகரிக்க களப்பணியாளர்கள் நியமனம்

## உழவர்கரை நகராட்சி ஆணையர் தகவல்

புதுச்சேரி, பிப். 17: உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

மத்திய அரசின் நகராட்சிகளுக்கான அம்ருட் திட்டத்தின் கீழ் புதுச்சேரி அரசின் உள்ளாட்சித்துறை உழவர்கரை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டவை மற்றும் செய்யப்படாதவைகள், காலி மனைகள் ஆகியவற்றை சொத்துவரி மற்றும் காலிமனை வரி சட்டத்தின் கீழ் கொண்டுவர புதுச்சேரி அரசின் 'ஜிஐஎஸ் கன்சார்ட்டியம் இந்தியா பி லிமிட்' என்ற நிறுவனத்தை தேர்வு செய்து ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் முதற்கட்டமாக உழவர்கரை நகராட்சி எல்லையை ஆளில்லா வான் வழி வாகனத்தை பயன்படுத்தி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள வீடுகள், காலிமனைகள், வணிக வளாகங்களை படம் பிடித்துள்ளது.

மேலும், அடுத்த கட்டமாக இந்நிறுவனம் உழவர்கரை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீடு, வீடாக சென்று வீதியில் இருந்தபடியே வீட்டின் முகப்பை புகைப்படம் எடுக்கும். மேலும், வீட்டில் வசிப்பவர்களிடம் வீட்டை பற்றிய விவரம் சேகரிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் முக்கிய பயனாக ஒவ்வொரு வீட்டையும் துல்லியமாக நீளம், அகலம் மற்றும் தளங்கள் கணக்கிடப்பட்டு அந்த வீட்டிற்கான புதிய வரியை நிர்ணயம் செய்ய முடியும். இதேபோல காலிமனைகளின் அளவுகள் கண்டறியப்பட்டு அந்த மனையின் காலிமனை வரியை நிர்ணயம் செய்ய முடியும்.

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட களப்பணியாளர்களுக்கு உழவர்கரை நகராட்சி ஆணையரால் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

# ஆலோசனை!

## • வியாபாரிகளுடன் அமைச்சர் நமச்சிவாயம்...
## • கடை அடைப்பு வேண்டாம் என வேண்டுகோள்

புதுச்சேரி, பிப். 17–

**கடை அடைப்பு போராட்டத்தில், வியாபாரிகளும், வியாபார சங்கங்களும் கலந்து கொள்ள வேண்டாம் என அமைச்சர் நமச்சிவாயம் வேண்டுகொள் விடுத்துள்ளார்.**



நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட கடைகளுக்கு உயர்த்தப்பட்ட வாடகை, குப்பை வரி மற்றும் இதர வரிகள் குறைப்பது சம்பந்தமாக, வியாபாரிகள் சங்க பிரதிநிதிகளுடனான ஆலோசனை கூட்டம் அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் நடந்தது. அருகில், சிவா எம்.எல்.ஏ.,

நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட கடைகளுக்கு சமீபத்தில் உயர்த்தப்பட்ட வாடகை, குப்பை வரி மற்றும் இதர வரிகள் குறைப்பது சம்பந்தமான ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது.

அமைச்சர் நமச்சிவாயம் தலைமை தாங்கினார். சிவா எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார்.

உள்ளாட்சித்துறை இயக்குனர் மன்சூர், புதுச்சேரி நகராட்சி ஆணையர் கணேசன், வருவாய்த் துறை அதிகாரி பாலாஜி மற்றும் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், புதுச்சேரி வர்த்தகசபை தலைவர் செண்பகராஜன், மாநில தொழில் வர்த்தகசபை சங்கங்களின் பேரவை தலைவர் கருணாநிதி, சதாசிவம், பெரிய மார்க்கெட் குபேர் அங்காடி சங்க தலைவர் ராமன், சிவகுருநாதன், நெல்லுமண்டி கடை வியாபாரி சங்க தலைவர் சுமர் சிங், நெல்லுமண்டி நகை வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் நலசங்க தலைவர் தங்கம், மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் சுந்தர், குபேர் பஜார் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட 60 வியாபாரிகள் சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், உயர்த்தப்பட்ட வாடகை மற்றும் குப்பை வாருவதற்கான வரி மற்றும் இதர வரிகள் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது எனவும், கடைகளுக்கு பழைய வாடகையே வசூலிப்பது என்றும் உயர்த்தப்பட்ட புதிய வாடகை மற்றும் வரிகள் சம்பந்தமாக முதல்வர், எம்.எல்.ஏ.,க்கள், அரசு அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து ஒரு குழு அமைத்து, அதனடிப்படையில் வாடகை மற்றும் வரிகள் நிர்ணயிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தை தொடர்ந்து, அமைச்சர் நமச்சிவாயம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், '20ம் தேதிக்கு மேல் குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடை அடைப்பு நடத்துவது என்று சில வியாபாரிகள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அந்த சங்க பிரதிநிதிகள் என்னை சந்தித்த போது மக்கள் நலன்கருதி கடை அடைப்பு போராட்டத்தை கைவிட்டு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என அழைப்பு விடுத்தேன்.

அதற்கு செவிசாய்க்காத அந்த வியாபார சங்கங்கள் அரசியல் உள்நோக்கத்துடன் கடை அடைப்பு போராட்டம் நடத்துகிறார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல், பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாமல் சுயநலத்திற்காக நடைபெறும் இந்த கடை அடைப்பு போராட்டத்தில் வியாபாரிகளும், வியாபார சங்கங்களும் கலந்துகொள்ள வேண்டாம் என அரசு சார்பில் கேட்டுக்கொள்கிறேன்' என கூறப்பட்டு உள்ளது.

Scanned by CamScanner

# New fish market operational

## The complex was inaugurated four years ago, but remained unoccupied

S. PRASAD
PUDUCHERRY

Nearly four years after it was inaugurated, the Modern Fish Market on the East Coast Road was thrown open to the public on Monday. The building had remained locked for the last few years because of disputes between the Fisheries department and the Oulgaret municipality over the allotment of stalls to vendors and the norms for selection of vendors.

The two-storey fully air-conditioned structure spread over 37,886 square feet was built by the Project Implementation Agency (PIA) with the World Bank assistance of ₹13.5 crore under the Tsunami Emergency Rehabilitation Project I. The complex was inaugurated by the then Chief Minister N. Rangasamy on February 19, 2014.

According to a senior official, 43 stalls have been allotted to vendors on the ground floor in the first phase. Each vendor would have to pay ₹50 a day for occupying the stalls. An auction hall for fish and an ATM would come up on the premises soon.



**New facility** Fisher women waiting for customers at the two-storied fish market on East Coast Road at Lawspet in Puducherry on Monday. ▪S.S. KUMAR

### No ownership rights

The stalls had been demarcated by selecting vendors from all fishing panchayats and those who had been affiliated to any of the fish markets managed by the municipalities and commune panchayats could not claim rights.

The market would be run by the Oulgaret municipality.

The market includes an effluent treatment plant and a 10-tonne ice plant. The plant would treat effluents collected from the market and had been fitted with a 10-kV solar power plant to meet the requirements of the shopping area.

The new complex was planned to cater to the needs of fishermen from several coastal villages in Puducherry. The complex has around 110 air-conditioned stalls, including 55 stalls on the ground floor, with cold storage facilities and separate areas for processing and cutting fish.

While cheap varieties of fish would be sold on the first floor, expensive ones would be available on the second floor. Since the complex was big, fishermen from several coastal villages could sell their catch.

**A SPOT FOR FISH**

- The airconditioned market is spread over 37,886 square feet
- There are 110 stalls, including 55 stalls on the ground floor
- The market has an effluent treatment plant and a 10-tonne ice plant
- Each vendor would have to pay ₹50 a day

Scanned by CamScanner

# பயன்பாட்டிற்கு திறந்து விடப்பட்டது நவீன மீன் அங்காடி

**புதுச்சேரி, பிப். 20–**

லாஸ்பேட்டை இ.சி. ஆரில், ரூ.13.42 கோடியில் கட்டப்பட்ட, நவீன சுகாதார மீன் அங்காடி நேற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது.

லாஸ்பேட்டை இ.சி. ஆரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 13.42 கோடியில், 'ஏசி' வசதியுடன், இரண்டு தளங்கள் கொண்ட நவீன மீன் அங்காடி கட்டப்பட்டது. 37,886 சதுர அடியில், உலகத்தரத்தில் அமைக்கப்பட்ட அங்காடியில், மீன்கள் விற்க 110 குளிரூட்டப்பட்ட ஸ்டால்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு மையம், ஐஸ் பிளான்ட், மீன் பதப்படுத்தும் அறை, ஜெனரேட்டர்கள், ஏ.டி.எம்., உணவகம் என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன.



லாஸ்பேட்டை இ.சி.ஆரில், நவீன சுகாதார மீன் அங்காடியை உள்ளாட்சி துறை இயக்குனர் முகமது மன்சூர் குத்துவிளக்கேற்றி, மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அருகில், உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ்.

கட்டி முடித்து திறக்கப்படாமல் இருந்த அங்காடி, லோக்சபா தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்பு, அவசர கதியில் 2014ம் ஆண்டு பிப்., 19ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. ஆனால், நான்கு ஆண்டுகளாகியும் பயன்பாட்டிற்கு வராமல், இருந்தது.

இதையடுத்து, அப்போதைய கவர்னர் ஏ.கே.சிங்., 2015 அக்., 18ம் தேதி, மீன் அங்காடியை ஆய்வு செய்தார்.

அதிகாரிகளை கண்டித்து, உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தரவிட்டார். மீன் அங்காடியை பாரமரிப்பது மீன்வளத் துறையா, உழவர்கரை நகராட்சியா என்பதில் சிக்கல் ஏற்பட்டது. பின், மீன் அங்காடி பராமரிக்கும் பணி, உழவர்கரை நகராட்சியிடம், 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒப்படைக்கப்பட்டது.

அதையடுத்து, ஐஸ் பிளாண்ட், இரண்டு குளிர் பதன சேமிப்பு கிடங்கு, உணவகம், பொது கட்டண கழிப்பிடம் ஆகியவை, பொது ஏலம் விட்டது. ஆனாலும், மீன் அங்காடி பயன்பாட்டிற்கு வரவில்லை.

இதையறிந்த, கவர்னர் கிரண்பேடி, 2016 ஆகஸ்டு 13ம் தேதி, மீன் அங்காடியை ஆய்வு செய்தார். அப்போது, அதிகாரிகளை கடிந்து கொண்ட அவர், செப்., மாதத்திற்குள் திறக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

மீன்அங்காடியில்தரைப் பகுதி தரமற்ற முறையில் அமைக்கப்பட்டதாக புகார் எழுந்தது. 'ஏசி' அறைக்கு தகுந்தாற்போல் அமைக்கப்பட்ட தரைப்பகுதி பல மாதங்களாக பயன்படுத்தப்படாமல் கிடந்ததால், சேதமடைந்தது.

கவர்னர் கிரண்பேடி ஆய்வுக்கு பின், மீண்டும் டெண்டர் விடப்பட்டு, ரூ. 22 லட்சம் செலவில் தரைப்பகுதி சீரமைக்கப்பட்டது.

இதையடுத்து, முதற்கட்டமாக, மீன் அங்காடி தரைத்தளத்தில், மீன் கடைகள் அமைக்க 43 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

அவர்கள் மூலம் மீன் விற்பனை செய்யும் பணி நேற்று துவங்கியது. உள்ளாட்சித்துறை இயக்குனர் முகமது மன்சூர், உழவர்கரை நகராட்சி கமிஷ்னர் ரமேஷ் ஆகியோர் குத்துவிளக்கேற்றி மீன் அங்காடியை திறந்து வைத்தனர். இந்த மீன் அங்காடி காலை 7:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை திறந்திருக்கும்.

மீன் விற்கும் ஸ்டால்களுக்கு முதல் பத்து நாட்களுக்கு வாடகையின்றியும், பின்னர் நாள் ஒன்றுக்கு ரூ.50 வாடகை வசூலிக்கப்படுகிறது.

மேலும், மீன் அங்காடியில் காய், கனி கடைகள், உணவகம் உள்ளிட்ட அனைத்தும் ஒரு வாரத்தில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

Scanned by CamScanner



பிரதமர் வருகையையொட்டி சாலையோரங்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி தூய்மைப்படுத்தும் பணியில் உழவர்கரை நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இடம்: தட்டாஞ்சாவடி காமராஜர் சாலை.

Scanned by CamScanner



## கதிர்காமம் தொகுதியில்

# புதிய பல்நோக்கு சமுதாயக்கூடம்

## நாராயணசாமி திறந்து வைத்தார்

புதுச்சேரி, பிப்.26-

புதுச்சேரி கதிர்காமம் தொகுதியில் எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சண்முகாபுரம் நெசவாளர் குடியிருப்பில் ரூ.1 கோடியே 23 லட்சம் செலவில் பல்நோக்கு சமுதாயக்கூடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா நடந்தது. விழாவிற்கு அமைச்சர் நமச்சிவாயம் தலைமை தாங்கினார். விழாவில் முதல்-அமைச்சர் நாராயணசாமி கலந்து கொண்டு புதிய சமுதாய நலக்கூடத்தை திறந்து வைத்தார். இதில் என்.எஸ்.ஜெ. ஜெயபால் எம்.எல்.ஏ., மற்றும் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

புதிதாக திறக்கப்பட்டுள்ள பல்நோக்கு சமுதாயக்கூடம் தரை தளத்தில் உணவு கூடம், சமையல் அறை, நீராவி அடுப்பு உள்ளது. முதல் தளத்தில் 150 பேர் அமரக்கூடிய நிகழ்ச்சி கூடம், மேடை, மணமகன், மணமகள் அறை மற்றும் பொதுக் கழிப்பறையும் அமைக்கப்பட்டு உள்ளது.

Scanned by CamScanner